
# திராவிடத்தால் வாழ்கிறோம்

1280

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




- வாழ்வோம்

---

# கழகம் கண்ட சட்டப் போராட்டங்கள்

**தமிழ்.கா.அமுதரசன்**

68

கழகம் நடத்திய உயிர்ப்புமிக்க சட்டப் போராட்டங்களை உணர்வுபூர்வமாக விவரிக்கும் தொடர்!

# கலைஞரின் கனவு
## கிராமங்களுக்கு அண்ணா தந்த தன்னிறைவு!




ஓவியம் : ரவி பேலட்

*2006-ஆம் ஆண்டில் புத்துயிர் பெற்ற, 'அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்', தமிழ்நாட்டின் தொலைநோக்குச் சிற்பி கலைஞரின் கனவுத் திட்டம். கிராமங்கள் தன்னிறைவு பெற்றவையாக இருக்க வேண்டும் என்கிற காந்தியடிகளின் நோக்கமும் வளர்ச்சியும் கடைக்கோடிக்கும் செல்ல வேண்டும் என்கிற சமூக நீதியின் இலக்கினையும் கொண்டு, அதற்கு 'அண்ணா' பெயரைச் சூட்டினார் அவரது தம்பி. கழக அமைச்சரவையில், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சராகப் பொறுப்பேற்ற இன்றைய கழகத் தலைவரின் ஆளுமைத் திட்டமாகவும் இருக்க வேண்டும் என்பதும் அவரது விருப்பம். 2007-ஆம் ஆண்டு ஜனவரி 21-ஆம் தேதி, அரக்கோணத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் புத்துயிர் பெற்ற இந்தத் திட்டத்தினைத் தொடங்கிவைத்தார், கலைஞர்.*

*தமிழ்நாட்டில் அன்றைக்கு இருந்த 12 ஆயிரத்து 618 கிராம ஊராட்சிகள், இந்தத் திட்டத்தின்கீழ் கொண்டுவரப்பட்டன. ஒவ்வோர் ஊராட்சிக்கும் 20 இலட்சம் ரூபாய் சிறப்பு ஒதுக்கீடு செய்யப்பட்டது. வரையறுக்கப்பட்ட செலவினமாக ரூ.15 இலட்சமும், வரையறுக்கப்படாத செலவினமாக ரூ.5 இலட்சமும் ஒதுக்கீடு செய்யப்பட்டது. அந்தத் தொகையைக் கொண்டு, ஒவ்வோர் ஊராட்சியிலும் அடிப்படைத் தேவைகளாக இருந்த குளம், நூலகம், விளையாட்டு மையம், சுடுகாடு - இடுகாடு, குடிநீர்த் திட்டப் பணிகள் ஆகியவை கட்டாயப் பணிகளாக மேற்கொள்ளப் பட்டன. தவிர, உள்ளூர்த் தேவையின் அடிப் படையில் தெரு விளக்குகள், மீன் வளர்ப்புக் குளங்கள், சிமெண்ட் சாலைகள், கிராமச் சந்தைகள் ஆகிய பணிகள் மேற் கொள்ளப்பட்டன.*

*மாநிலத்திலுள்ள அனைத்து கிராம ஊராட்சிகளிலும் ஐந்தாண்டுக் காலத்திற்குள் முழுமையான உள்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துவதே இத்திட்டத்தின் ஐந்தாண்டுக் கால (2006-2011) ஒட்டுமொத்த இலக்காகும். குறிப்பாக, இந்தப் பணிகள் அனைத்தும் ஊராட்சி நிர்வாகம் வழியாகவே செயல் படுத்தப்படும் வகையில், வழிகாட்டுதல்கள் வழங்கப்பட்டன.*

### நிதி ஆதாரத்தில் நிர்வாக ஆளுமை

*திட்டத்தினைத் தொடங்குவதற்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. நிதி ஆதாரம் எங்கே எனக் கேள்வி எழுந்தபோது, கலைஞர் அளித்த வழிகாட்டுதல்தான் அவரது நிர்வாகத் திறனுக்குச் சான்று. அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்திற்காகப் பல்வேறு திட்டங்களில் இருந்து ஒருங்கிணைக்கப் பட்டு, ஆண்டுக்கு ரூ.500 கோடி ஒதுக்கப்பட்டது. நமது கிராமம் திட்டம் ரூ.175 கோடி, வறுமை ஒழிப்புத் திட்டம் ரூ. 20 கோடி, ஊரகக் குடியிருப்புத் திட்டம் ரூ.50 கோடி, தன்னிறைவுத் திட்டம் ரூ.75 கோடி, ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கான பகிர்வு நிதி (சமன்பாடு நிதி மற்றும் ஊக்கத்தொகை நிதிகள்) ரூ.90 கோடி ஆகியவற்றுடன் கூடுதலாக 2006-2007 நிதி ஆண்டில், இதற்கென ரூ.90 கோடி ஒதுக்கி, திட்டத்தினைத் தொடங்கினார். இந்தப் பணிகளுக்காக மாநில அரசின் வேளாண் துறை, கல்வித் துறை, குடிநீர் வடிகால் வாரியம், நெடுஞ்சாலைத் துறை போன்ற முக்கியத் துறைகளின் பணிகளும் ஒருங்கிணைக்கப்பட்டன.*

*அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் கீழ், அனைத்து ஊராட்சிகளிலும் நூலகங்கள் ஏற்படுத்த வேண்டும் என்பது அடிப்படையான, கட்டாயப் பணியாக இருந்தது. புதிதாக இடம்பெறப்பட்டு, அல்லது ஏற்கெனவே உள்ள தேர்ந்தெடுக்கப் பட்ட இடங்களில் நூலகம் அமைக்கப்பட்டு, ஒவ்வொரு நூலகத்துக்கும் ரூ.50 ஆயிரம் மதிப்பில் நூல்கள் கொள்முதல் செய்யப்பட்டன. நூல் புரவலர்களிடம் நூல்கள் பெறவும் வழிகாட்டுதல்கள் வழங்கப்பட்டன. இதன் காரணமாக 'அனைத்து ஊராட்சிகளிலும் நூலகம் அமையப்பெற்ற ஒரே மாநிலம்' என்ற பெருமையைத் தமிழ்நாடு பெற்றது. இப்படி ஊர்தோறும் அமைக்கப்பட்ட நூலகங்களுக்கு 'அய்யன் திருவள்ளுவர் நூலகம்' என்கிற பெயர் சூட்டப்பட்டது.*

*2010-ஆம் ஆண்டு ஏப்ரல் 26 அன்று, இந்தத் திட்டத்தின் செயல்பாடுகள் குறித்து சட்டப்பேரவையில் விரிவாக விளக்கினார், அன்றைக்குத் துணை முதலமைச்சராக இருந்த நம் கழகத் தலைவர் அவர்கள். ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்துக்குப் பதிலளித்த அவர்...*

*"இந்தத் திட்டத்திலே ஒரு மிகப்பெரிய சிறப்பு என்னவென்று கேட்டால், ஒவ்வொரு கிராம ஊராட்சி யிலும் நூலகங்களைத் தொடங்கியுள்ளோம். 2006 -2007 ஆம் ஆண்டு இந்தத் திட்டத்தைத் தொடங்கியவுடன், நூல் நிலையங்களை உருவாக்கு கின்ற பணியைத் தொடங்கி னோம். முதலில், 2,534 கிராம ஊராட்சிகளில் ஒரு நூலகத்துக்கு 897 வகையான புத்தகங்கள் என்ற அளவில் 22 இலட்சத்து 72 ஆயிரத்து 998 புத்தகங்கள், அதாவது 11 கோடியே 58 இலட்சம் ரூபாய் செலவிலே வழங்கப்பட்டன.*

*இது ஒவ்வோராண்டும் இப்படித் தொடர்ந்து வழங்கி, மொத்தமாகக் கணக்கெடுத்துப் பார்த்தால், இந்த நான்கு ஆண்டுக்காலத்தில் 10,104 கிராம ஊராட்சிகளில், 10,104 நூலகங்களுக்கு 48 கோடியே 33 இலட்சம் ரூபாய் செலவில் 96 இலட்சத்து 46 ஆயிரத்து 768 புத்தகங்கள் அதாவது, ஏறக்குறைய ஒரு கோடி புத்தகங்கள் இன்றைக்கு கிராம ஊராட்சிகளில் இருக்கக்கூடிய, நூல் நிலையங்களுக்கு வழங்கப்பட்டிருக்கின்றன" என்றார்.*

*இப்படி, இந்தத் திட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட ஒவ்வொரு வழிகாட்டுதலும் அதன் இலக்கினை எட்டின என்றே சொல்லலாம். குறிப்பாக, 2007 முதல் 2011 வரையிலான ஐந்து ஆண்டுகளில், 12 ஆயிரத்து 746 கோடியே 19 இலட்சத்து 73 ஆயிரம் ரூபாய் செலவில், 31 இலட்சத்து 20 ஆயிரத்து 320 பணிகள் நிறைவேற்றப்பட்டு, கிராம ஊராட்சிகள் வளம் பெற்றன என்கிறது, அன்றைக்கு வெளியிடப்பட்ட அரசுக் குறிப்புகள்.*

*கல்வியில் மட்டுமல்ல மருத்துவம், தொழில், சுகாதாரமான குடிநீர், தரமான சாலைகள் என இந்தியாவின் எந்த ஒரு மாநிலத்தின் கிராமத்துடனும் ஒப்பிடவே முடியாத அளவுக்கு, இன்றைக்கு தமிழ்நாட்டுக் கிராமங்கள் வளர்ந்துள்ளன என்று சொன்னால், அதற்கு இந்தத் திட்டத்தின்மூலம் கலைஞர் போட்ட அடித்தளம்தான் காரணம். ஆனால், மீண்டும் ஆட்சி மாற்றம். மீண்டும் அண்ணா மறுமலர்ச்சி திட்டத்துக்கு மூடுவிழா. 10 ஆண்டுகள் காத்திருப்புக்குப் பின்னர் மீண்டும் உயிர்பெற்றது கலைஞரின் கனவு.*

> **"இந்தியாவின் எந்த ஒரு மாநிலத்தின் கிராமத்துடனும் ஒப்பிடவே முடியாத அளவுக்கு, இன்றைக்கு தமிழ்நாட்டுக் கிராமங்கள் வளர்ந்துள்ளன என்று சொன்னால், அதற்கு காரணம் கலைஞர்."**

...தொடரும்

---

## அநீதியான தேர்வு, நேர்மையற்ற செய்திகள்!

'நீட்' தேர்வு பாரபட்சமானது, சமூக நீதிக்கு எதிரானது என்பதற்கு, தொடர்ச்சியாகப் பல உதாரணங்கள் சொல்லப்பட்டு வரும் நிலையில், ஒரு காவலாளியின் மகள் பெற்ற 'நீட்' மதிப்பெண்களைக் கொண்டு, 'நீட்' அநீதியை விளக்கியிருக்கிறார், ஹக்கீன் அப்பாஸ் என்பவர். 'திராவிட ஆய்வு' முகநூல் தளத்தில் அவர் எழுதியுள்ள பதிவிலிருந்து...

"ஏழை மாணவர்கள் தேர்ச்சி என்று செய்திகளைப் பகிர்கிறார்கள். ஆனால், அவர்களுக்கு எந்த மருத்துவக் கல்லூரியில் இடம் கிடைத்தது என்றால், எந்தத் தகவலும் கிடைப்பதில்லை. காரணம், நீட் தேர்வில் 120 மார்க் எடுத்தாலே பாஸ்தான். ஆனால், தேர்ச்சிபெற்ற செய்தியை மட்டும் பதிவுசெய்யும் ஊடகங்கள், அவர்களுக்கு எங்கே சீட் கிடைத்தது என்று கூறுவதில்லை. இதற்குச் சிறந்த உதாரணம், சமீபத்தில் 'நீயா நானா' என்கிற விவாதத்தில், ஒரு காவலாளி மகளின் கதை.

அந்த மாணவி 3 முறை 'நீட்' எழுதி, கடைசியாக 420 மார்க் எடுத்துள்ளார். ஆனால், அந்த மாணவிக்கு மருத்துவ இடம் கிடைக்கவில்லை. நாட்டில் உள்ள 91,927 மருத்துவ இடங்களுக்கு 'நீட்'டில் வெற்றி பெற்றவர்களின் எண்ணிக்கை 9,93,069. இதில் அரசு இடங்கள் 48,012-ஐ மதிப்பெண் முன்னுரிமை அடிப்படையில் நிரப்புவார்கள்.

மீதம் இருக்கும் 43,915 இடங்கள், தனியார் கல்லூரிகளில் நிரப்பவேண்டியது. இதற்கு 'நீட்' தேர்ச்சி பெற்றால் போதும்.

உதாரணமாக மேலே கூறிய அந்தக் காவலாளியின் மகள், 420 மதிப்பெண் எடுத்திருந்தாலும், தனியார் கல்லூரியில் பணம் கட்டிப் படிக்கலாம். ஆனால், அவரால் படிக்க முடியவில்லை. வசதியான குடும்பத்தைச் சேர்ந்த மாணவி ஒருவர் 'நீட்' மதிப்பெண் 120 எடுத்து, தனியார் கல்லூரியில் படித்துகொண்டு இருக்கிறார்.

இது எப்படி தகுதித் தேர்வு ஆகும். உண்மையான தகுதித் தேர்வு என்றால், 420 மார்க் எடுத்த அந்த மாணவிக்குத்தானே அனுமதி கொடுத்திருக்க வேண்டும். ஆகையால்தான், ஏழை மாணவர் 'நீட்' தேர்வில் வெற்றி என்று மட்டும் செய்தி வருகிறது. அதாவது, ஓர் ஏழையின் பிள்ளை 'நீட்' தேர்வில் வெற்றி என்று மட்டும் செய்தியாகப் பதிவுசெய்து, நம்மை ஏமாற்றுகிறார்கள்" என்று குறிப்பிட்டுள்ளார்.

---

## ஃப்ளாஷ்பேக்





ஏ.வி.இராமநாதன்

### பொங்கல் விழாவில், தளபதி!

2003-ஆம் ஆண்டு, சென்னை 118-வது வட்டத்தில், கழகத்தின் பகுதிப் பிரதிநிதியாக இருந்த என் தலைமையில், பொங்கல் விழா நடத்தினோம். அதையொட்டி நடைபெற்ற போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு, அன்றைய இளைஞர் அணிச் செயலாளர், இன்றைய நம் கழகத் தலைவர் அவர்கள் வருகைதந்து, பரிசுகளை வழங்கி மகிழ்வித்தார்கள். நிகழ்ச்சிக்குத் தலைவர் அவர்கள் வருகைதந்தபோது, நான் வரவேற்ற படம்.

**- ஏ.வி.இராமநாதன், மாவட்டப் பிரதிநிதி, சென்னை மேற்கு.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

---

## கருவூலம்

### கழகத்தின் கலைக்கண்காட்சி!

1961-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 16, 17 ஆகிய இரண்டு நாட்கள், கோவையில் நடந்த கழகத்தின் தேர்தல் சிறப்பு மாநாட்டையொட்டி, கலைக்கண்காட்சி நடத்தப் பட்டது. கண்காட்சி அமைப்பாளர் டி.எம்.பார்த்தசாரதி, டி.கே.பொன்னுவேலு ஆகிய இருவரும் மிகச் சிறப்பான முறையில் கலைக்கண்காட்சியை அமைத்திருந்தனர். டிசம்பர் 10-ஆம் தேதி, தலைமை நிலைய அமைப்புச் செயலாளர் என்.வி.நடராசன், கண்காட்சியைத் திறந்து வைத்தார். ஒரு இலட்சத்திற்கும் அதிகமான பொதுமக்கள் பார்வையிட்டனர்.

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2024-2026.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2024-2026 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by D.Karthikeyan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044 - 45849900